26th November 1955]

(*b*) whether any public contribution for the work was received, and if so, how much?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) The work relating to the construction of an emergency ward in the Local Fund Hospital at Gingee is under execution.

(*b*) A contribution of Rs. 2,500 (rupees two thousand and five hundred only) was received from the public.

SRI A. GOVINDASAMY NAYAGAR: பொதுமக்களிடமிருந்து எவ்வளவு பணம் வசூல் செய்யப்பட்டிருக்கிறது? யார் வசூல் செய்தார்கள்? அதில் எவ்வளவு பணம் சர்க்கார் கணக்கில் செலுத்தப்பட்டது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: பொதுமக்களிடமிருந்து 2,500 ரூபாய் வசூல் செய்யப்பட்டிருக்கிறது.

Retrenchment in the Government Thermal station, Madurai

* 2911 *Q.*—SRI N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether it is a fact that 105 workers employed in the Government Thermal Station at Madurai were retrenched in the month of May 1955; and

(*b*) if so, the reasons therefor?

THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI: (*a*) & (*b*) The attention of the hon. Member is invited to the short notice starred question by Sri K. P. Gopalan on the subject answered on the floor of the House on 27th August 1955.

SRI N. K. PALANISAMY: [கேஸில் சம்பந்தப்பட்டவர்கள் 37 பேர்கள்தான். ஆனால் 105 தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் மூன்று, நான்கு வருஷ சர்விஸ் உடையவர்கள். ஆனால் அவர்களை வேலையிலிருந்து நீக்கிவிட்டு, ஆகஸ்டு மாதத்தில்கூட அனுபவம் எதுவும் இல்லாத முப்பது பேர்களை வேலைக்கு எடுத்திருப்பதாகத் தெரிகிறது. ஆகவே வேலை இருந்தால் இந்தக் கேஸில் சம்பந்தப்படாதவர்களுக்காவது உடனடியாகக் கொடுக்கும்படி என்ஜினியர்களுக்கு உத்திரவிடுவார்களா?

THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI: வேலையிலிருந்து நீக்கியது அவர்கள் எல்லோரும் அந்தக் கேஸில் சம்பந்தப்பட்டவர்கள் என்ற காரணத்திற்காக அல்ல. அந்த ஸ்டேஷன் வேலை செய்யவில்லையாதலால்தான் நீக்கப்பட்டார்கள். வேலை செய்ய ஆரம்பித்தவுடன் அவர்களையே எடுத்துக்கொள்ளப்போவதாகவும் என்ஜினியர் தெரிவித்திருக்கிறார்.

SRI K. V. RAMASWAMI: On a point of order, Sir. May I know what happens to my question No. 2912?

MR. SPEAKER: I have already said that the Minister for Religious Endowments and Transport is not present and that his questions will be taken up at the next meeting day.

(* 2912 *Q.*—Postponed.)